Agricultural University.

* 331 *Q.*—Thiru K. VINAYAKAM :
Thiru S. RAMACHANDRAN :
Thiru S. DURAISAMY :
Thiru R. MANICKAVACHAGAM : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(*a*) whether the Government of Tamil Nadu has decided to start an Agricultural University in our State; and

(*b*) if so, how soon?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) & (இ) தமிழ் நாட்டில் வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஒன்றைத் துவக்குவது குறித்த செயற்குறிப்பை அரசு கொள்கையளவில் ஏற்றுக்கொண்டுள்ளது. பல்கலைக்கழகம் அமைக்கப்படவிருக்கிற இடம், தொடங்கவிருக்கும் காலம், பிற விவரங்கள் ஆகியவை, தொடக்க ஏற்பாடுகள் முடிவு செய்யப்பட்ட பின்னர், விரைவில் தீர்மானிக்கப்படும்.

திரு. கே. விநாயகம் : கொள்கையளவிலே இந்த அக்ரிகல்சுரல் யுனிவர்சிடி துவக்கப்படுமென்று பட்ஜெட் ஸ்பீச்சிலே வந்தது. அதற்கு வேண்டிய பூர்வாங்கமான வேலைகள், ப்ரிலிமினரில் எல்லாம் நடத்தப்பட்டு இருக்கிறதா? துவக்கினால் ஜூன் மாதத்திலே துவக்கவேண்டும், இல்லையென்றால் காலதாமதம் ஆகும். ஆகவே, அதற்குவேண்டிய திட்டங்களைப் போட்டு விரைவிலே செயல்படுத்துவதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : பல்கலைக் கழகம் கொண்டுவருவதற்கு முன்னால் சட்டமன்றத்திலே அதற்காக ஒரு மசோதா கொண்டுவரவேண்டும். அந்த மசோதாவை இப்பொழுது தயார்செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த மசோதாவைக் கொண்டுவந்து நிறைவேற்றிய பிறகு நிதி ஒதுக்கீடு செய்து, என்னென்ன வகையிலே இவற்றை விரைவாகச் செய்யலாம் என்று பார்த்து நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்த வேளாண்மைப் பல்கலைக்கழகம் பஞ்சாபிலே நன்றாக இயங்கி வருகிறது. அதுபோல் இங்கேயும் துவங்குவதற்கு டெல்லி அரசிடமிருந்து ஏதாவது அனுமதி பெறவேண்டியிருக்கிறதா ? அப்படியானால் அது கிடைத்துவிட்டதா ? இந்த வேளாண்மைப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டால் இப்பொழுது நடைபெற்றுவருகின்ற பசுமைப் புரட்சிக்கு மேலும் உறுதுணையாக இருக்கும் என்ற காரணத்தினால் அதனை விரைவிலேயே தொடங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

1970 மார்ச் 12]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : டெல்லி அரசாங்கம் ஏற்கனவே இந்தப் பல்கலைக்கழகம் இங்கே அமைய வேண்டும் என்றுதான் வற்புறுத்திக்கொண்டு வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சமீபத்திலே பஞ்சாப்புக்குச் சென்றபொழுது அங்கேயிருக்கிற துணைவேந்தரோடு கலந்துபேசி, லூதியானாப் பல்கலைக்கழகத்தைப் பார்வையிட்டும் வந்திருக்கிறார்கள். 1968-ஆம் ஆண்டு வேளாண்மை இயக்குநர், டீன், அக்ரிகல்சுரல் காலேஜ், டைரக்டர் ஆப் அனிமல் ஹஸ்பென்ட்ரி, டைரக்டர் ஆப் வெட்டரினரி சர்வீஸஸ், டீன், அக்ரிகல்சுரல் காலேஜ், மதுரை, அக்ரோநாமிஸ்ட், அக்ரிகல்சுரல் காலேஜ், மதுரை இவர்கள் ஆறு பேர்களைக்கொண்ட குழுவை நியமித்து இன்னும் பல பல்கலைக்கழகங்களுக்குச் சென்று பார்வையிட்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் கொடுத்திருக்கிற குறிப்புகளின் மீதும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்று பார்வையிட்டுவந்த விவரங்களை வைத்துக்கொண்டும் புதிய மசோதாவைத் தயார்செய்து கொண்டிருக்கிறோம். இந்த மசோதாவை நிறைவேற்றியதற்குப் பிறகு எப்படியெல்லாம் நடத்தலாம் என்பதுபற்றி முடிவெடுக்கலாம்.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, கோவையிலே வேளாண்மைக் கல்லூரி இருக்கிறது. அங்கே போதுமான வசதிகள் இருக்கின்ற காரணத்தினால் இந்த நடைமுறை ஆண்டிலேயே இந்தப் பல்கலைக்கழகத்தை அங்கே துவக்குவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: கோவையிலே இதற்கு வாய்ப்புகள் இருப்பதால்தான் அங்கே இந்தப் பல்கலைக்கழகத்தைக் கொண்டுவரவேண்டுமென்று அரசாங்கம் முடிவெடுத்திருக்கிறது. முதலிலே இதற்கான மசோதாவை நிறைவேற்றவேண்டும். அதற்காகத்தான் நான் முதலிலேயே சொன்னபடி மசோதாவைத் தயார் செய்து கொண்டிருக்கிறோம். இந்தச் சட்டமன்றத் தொடர் கூடத்திலேயே கொண்டுவரலாம் என்று நம்புகிறேன்.

ஏம்பலில் அரிசன விடுதி

*** 332 வினா—புலவர் பொ. பொன்னம்பலம் :** மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருமயம் கூற்றத்திலுள்ள ஏம்பலில் பயிலும் மாணாக்கருக்கு வசதியாக அங்கு அரிசன நல விடுதியொன்று அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: ஏம்பலில் ஒரு அரசினர் மாணவர் இல்லம் துவக்கும் குறிப்பு அதைப் போன்ற மற்ற செயற்குறிப்புகளுடன் தகுதிக்கேற்ப நாளடைவில் அரசினரால் பரிசீலனை செய்து ஆணை விடுக்கப்படும்.